## சுருக்கம்

மாற்றுத்திறனாளிகள் நலத் துறை – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு – மாற்றுத்திறனாளிகளுக்கு சுய வேலைவாய்ப்பினை ஊக்குவித்ததல் – ஆவின் நிறுவனத்தின் பால் உற்பத்தி பொருள் விற்பனை மையங்களை மாநில அரசு வளாகங்களில் அமைக்க தேவையான வாடகை மற்றும் வாடகை முன்பணம் (Advance) செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

## மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந–2)த் துறை

அரசாணை (நிலை) எண்.20

நாள்: 14.07.2022,
சுபகிருது, ஆனி 30,
திருவள்ளுவர் ஆண்டு, 2053.

படிக்கப்பட்டது :

1. அரசாணை (நிலை) எண்.32, மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந-2)த் துறை, நாள் 10.08.2018.
2. அரசாணை (ப) எண்.26, மாற்றுத்திறனாளிகள் (மாதிந-2)த் துறை, நாள் 21.10.2019.
3. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் கடித ந.க. எண்.3064/பணியமர்த்தல்/2021, நாள் 22.04..2022.
4. நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், கடித எண்.1822/என்.2/வி.பி./2019, நாள் 19.05.2022.

******

**ஆணை:-**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மாற்றுத் திறனாளிகளுக்கு சுயவேலைவாய்ப்பு ஏற்படுத்தும் வகையில் ஆவின் நிறுவனத்தின் மூலம் பால் உற்பத்திப்பொருள் விற்பனை மையம் அமைக்க அந்நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய முன்வைப்பு நிதி ரூ.25,000/-ஐ மானியமாக வழங்க முதற்கட்டமாக மாநிலம் முழுவதும் 100 பயனாளிகள் பயனடையும் வகையில் ரூ.25.00 இலட்சம் (ரூபாய் இருபத்தைந்து இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், மாற்றுத் திறனாளிகளுக்கு சுயவேலைவாய்ப்பு ஏற்படுத்தும் வகையில் 2019-2020 ஆண்டு முதல் ஆவின் நிறுவனத்திற்கு பயனாளிகள் செலுத்த வேண்டிய முன்வைப்பு நிதி ரூ.25,000/-யுடன், ஆவின் பொருட்களை கொள்முதல் செய்வதற்கு பயனாளிகளுக்கு மானியமாக ரூ.25,000/- என மொத்தம் ஒரு பயனாளிக்கு மானியமாக ரூ.50,000/- வீதம் 200 பயனாளிகள் பயனடையும் வகையில், ரூ.1.00 கோடி நிதியினை (ஒரு கோடி ரூபாய் மட்டும்) ஒப்பளிப்பு செய்தும், 2019-2020 ஆண்டிற்கு திட்டத் தொடராணை வழங்கியும் ஆணையிடப்பட்டது.

3. 2022-2023 ஆம் நிதியாண்டிற்கான சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தொடரில் 21.04.2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இன்னபிறவற்றுடன் கீழ்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:-

> **"அரசு வளாகங்களில் மாற்றுத்திறனாளிகள் ஆவின் பாலகம் அமைக்க தேவையான வாடகை மற்றும் முன்தொகை செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்து தகுதியான பயனாளிகளுக்கு பொதுப்பணித் துறை, வருவாய்த்துறை ஆகியதுறைகளுடன் ஆவின் நிறுவனம் இணைந்து ஆவின்பாலகம் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்".**

4. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் கடிதத்தில், மாற்றுத்திறனாளிகள் பொருளாதார மேம்பாட்டுக்கான சுயவேலைவாய்ப்பு ஏற்படுத்தும் வகையில் ஆவின் நிறுவனத்தின் பால் உற்பத்திப்பொருள் விற்பனை மையம் அமைக்கும் திட்டம் ஆண்டுதோறும் 200 மாற்றுத்திறனாளிகள் பயனடையும் வகையில் செயல்பட்டு வருகிறது என்றும், இத்திட்டத்திற்காக ஆவின் நிறுவனத்திற்கு பயனாளிகள் செலுத்த வேண்டிய முன்வைப்பு தொகை மற்றும் ஆவின் பொருட்களை கொள்முதல் செய்தல் ஆகியவற்றிற்காக ஒரு பயனாளிக்கு ரூ.50,000/- வீதம் 200 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருவதாகவும், இத்திட்டத்தில் பயனாளிகள் வாடகை செலுத்துவதினால் ஏற்படும் வருவாய் இழப்பைத் தவிர்க்க அரசு நிறுவன வளாகங்களில் மாற்றுத்திறனாளிகள் நல உரிமைகள் சட்டம், 2016, பிரிவு 2k-ன்படி அரசு நிறுவனங்களில் (Government Establishment) மாற்றுத்திறனாளிகள் ஆவின் பாலகம் அமைக்க தேவையான வாடகை மற்றும் வாடகை முன்பணம் (Advance) செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்திடவும் மற்றும் தகுதியான பயனாளிகளுக்கு பொதுப்பணித் துறை, வருவாய்த் துறை ஆகிய துறைகளுடன் ஆவின் நிறுவனம் இணைந்து அரசு விதிமுறைகளுக்கு உட்பட்டு தேர்வு செய்யப்படும் மாற்றுத்திறனாளிகளே ஆவின் பாலகம் நடத்திட அனுமதி வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் அவர்களது கடிதத்தில், ஆவின் நிறுவனம் பாலகங்கள் அமைப்பதற்கு பல்வேறு அரசு துறைகள் தங்களுக்கு சொந்தமான இடத்தினை ஒதுக்கீடு செய்து வழங்குவர் என்றும் மேலும் அவ்விடம் / கட்டடத்திற்கு உரிய வாடகை தொகையினை அந்தந்த துறையே நிர்ணயிக்கிறது என்றும் (பொதுப்பணித்துறை, உள்ளாட்சித்துறை, வருவாய்த்துறை போன்றவை) எனவே, மாற்றுத் திறனாளிகளுக்கு ஆவின் பாலகம் அமைக்க அந்தந்த துறையினர் வாடகை விலக்கு அளித்து ஒதுக்கீடு அளிக்கும்பட்சத்தில், ஆவின் பாலகம் அமைக்க ஆவின் நிறுவனம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்றும் மேலும் ஆவின் பாலகம் தொடர்ந்து நடத்திட செலுத்தப்படும் பாதுகாப்பு தொகையின்றி (Security Deposit) உரிமம் வழங்கிடவும் உரிய விதிமுறைக்கு உட்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

6. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரது கருத்துருவினை நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் அவர்களின் குறிப்புரையின் அடிப்படையில் பரிசீலித்த அரசு அதனை ஏற்று, தமிழக அரசின் பொதுப்பணித் துறை மற்றும் வருவாய்த் துறைகளை சார்ந்த **மாநில அரசு வளாகங்களில்** அத்துறைகளுக்கு சொந்தமான இடத்தில் ஆவின் பாலகம் அமைப்பதற்கான இடம், ஒதுக்கீடு வழங்கப்படும் நேர்வுகளில் அரசு விதிமுறைகளின் அடிப்படையில் ஒதுக்கீடானது மாற்றுத் திறனாளிகளுக்கு

வழங்கப்படும் பட்சத்தில் சம்பந்தபட்ட துறைகள் மேற்படி ஆவின் பாலகங்களுக்கு மட்டும் வாடகை விலக்கு அளித்திடவும் மற்றும் அவ்விடங்களில் ஆவின் பாலகம் அமைத்திட ஆவின் நிறுவனம் உரிய நடவடிக்கை மேற்கொள்வதுடன் அப்பாலகங்களை தொடர்ந்து நடத்திட ஆவின் நிறுவனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய முன் வைப்பு தொகை / பாதுகாப்பு தொகையின்றி (Security Deposit) மாற்றுத் திறனாளிகளுக்கு உரிமம் வழங்கிடவும் முடிவு செய்து அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. ஆனந்தகுமார்,
அரசு செயலாளர்.

பெறுநர்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் ம.வ.மே.) அலுவலகம், சென்னை-9.
மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், சென்னை-5.
சம்பளக் கணக்கு அலுவலகம், சென்னை-9/35.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை-18.
அனைத்து மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம்.
(மாற்றுத்திறனாளிகள்நல இயக்குநர் வழியாக)

<u>நகல்:-</u>
நிதி (சந)த் துறை, சென்னை-9.
பொதுப்பணித் துறை, சென்னை-9.
வருவாய் (மற்றும்) பேரிடர் மேலாண்மைத் துறை, ,சென்னை-9.
கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் (மற்றும்)
மீனவர் நலத்துறை, சென்னை-9.
அரசு செயலரின் முதுநிலை முதன்மை தனிச் செயலாளர்,
மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்